हर हर शङ्कर ॐ जय जय शङ्कर








श्री-वेदव्यासाय नमः

# श्रीमद्-आद्य-शङ्कर-भगवत्पाद-परम्परागत-मूलाम्नाय-सर्वज्ञ-पीठम्
# श्री-काञ्ची-कामकोटि-पीठम्
# जगद्गुरु-श्री-शङ्कराचार्य-स्वामि-श्रीमठ-संस्थानम्

## ॥ अक्षय-तृतीया ॥

**वैशाख-शुक्ल-तृतीया**

நமது ஸநாதன தர்மத்தில் பாபங்களை போக்கிக்கொள்வதன் மூலமாக கஷ்டங்களிலிருந்து விடுபடுவதற்கும், ஸுகங்களை அடைவதற்கும் பல உபாயங்கள் வேத/புராண/இதிஹாஸங்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் தானம் மிகவும் சக்தி வாய்ந்த உபாயம் என்று பகவான் கருட புராணத்தில் “**दानेन सुलभो धर्मः**” என்று கூறுகிறார்.

அந்த தானமும் சில இடங்களில்/ஸமயங்களில் செய்யும் பொழுது மிக அதிக பலனைக் கொடுக்கக் கூடியது. அவ்வாறான ஒரு ஸமயம் தான் இந்த “அக்ஷய த்ருதீயை”. சித்திரை மாதத்தின் அமாவாஸ்யைக்குப் பிறகு வரக்கூடிய (சாந்த்ரமானப்படி, வைஶாக மாஸத்தின்) ஶுக்ல த்ருதீயையே அக்ஷய த்ருதீயை எனப்படும்.

அன்று செய்த தானத்தின் பலனானது என்றும் குறையாமல் இருப்பதால் இந்த பெயர் ஏற்பட்டுள்ளது என்று பவிஷ்ய புராணம் கூறுகிறது—

वेद-धर्म-शास्त्र-परिपालन-सभा

9884655618 8072613857 vdspsabha@gmail.com vdspsabha.org

**या त्वेषा कुरुशार्दूल वैशाखे मासि वै तिथिः।**
**तृतीया साऽक्षया लोके गीर्वाणैरभिनन्दिता॥ २९॥**

**यत् किंचिद् दीयते दानं स्वल्पं वा यदि वा बहु।**
**तत् सर्वमक्षयं स्याद् वै तेनेयमक्षया स्मृता॥ ३१॥**

**---भविष्यमहापुराणे प्रथमे ब्रह्मपर्वणि एकविंशे अध्याये**

அக்ஷய த்ருதீயை தினத்தில் உபவாஸமிருந்து தானாதிகளைச் செய்தால் மேலும் அதிகமான பலன் உண்டாகும் என்றும் ஆசைப்படக்கூடிய அனைத்தும் கிடைக்குமென்றும் பகவான் பரமேஸ்வரன் பார்வதிக்கு உபதேசித்ததை மத்ஸ்ய புராணம் கூறுகிறது.

**अथान्यामपि वक्ष्यामि तृतीयां सर्वकामदाम्।**
**यस्यां दत्तं हुतं जप्तं सर्वं भवति चाक्षयम्॥ १॥**

**वैशाखे शुक्लपक्षे तु तृतीया यैरुपोषिता।**
**अक्षयं फलमाप्नोति सर्वस्य सुकृतस्य च॥ २॥**

**---मत्स्यमहापुराणे पञ्चषष्टे अध्याये**

**सहस्रगुणितं दानं भवेद् दत्तं युगादिषु।**
**वैशाखे शुक्लपक्षे तु तृतीयायां च भामिनि॥**

**स्नात्वा तु तर्पयेद् भक्त्या तिलदर्भजलैः प्रिये।**
**श्राद्धं कृतं भवेत् तेन गङ्गायां नात्र संशयः॥**

**---स्कान्दे महापुराणे सप्तमे प्रभासखण्डे**

பொதுவாக யுகாதிகளில் தானம் செய்தால் ஆயிரம் மடங்கு பலன் கிடைக்கின்றது. அக்ஷய த்ருதீயை என்பது க்ருதயுகத்தின் தொடக்கம். அன்று தானம் செய்வதால் அனந்த பலனும் அன்று பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்வதால் கங்கையில் ஶ்ராத்தம் செய்த பலனும் கிடைப்பதாக ஸ்காந்த புராணமும் பாத்ம புராணமும் கூறுகின்றன.